# மகராஜி: தெளிவு எனும் உருப்பெருக்கிக்கண்ணாடி ஊடாக ஊயிர்வாழ்வின் எழிமையை புரிந்து கொள்ள ஆரம்பியுங்கள்

கடந்த பல மாதங்களாக மஹராஜி பற்றியும் அவரின் உள் அமைதியைப் பற்றிய செய்தி பற்றியும் கட்டுரைகளை வழங்கி வருகின்றோம். மஹராஜி தனது சிறு பராயத்தில் இருந்தே மக்களுக்கு இவ்விடயம் தொடர்பாக உரையாற்றி வருவதுடன் தனது 13 ஆவது வயதிலேயே அவர் உலகைச்சுற்றிப் பிரயாணம் செய்ய ஆரம்பித்து விட்டார். அன்று தொட்டு அவர் உலகைச் சுற்றியுள்ள ஆறரைக்கோடி மக்களுக்கு உரையாற்றியுள்ளார். அவருடைய உரைகளை பல்வேறு ஊடகங்களின் ஊடாக 85ற்கும் மேற்பட்ட நாடுகளில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

நாம் ஒரு பொருளைப் பார்க்கும் போது நாம் அதைத் தெளிவாகப் பார்ப்பதுபோல் தோன்றலாம். அதன் மேல் ஒரு உருப்பெருக்கிக் காட்டியை வைத்துப் பாருங்கள். அப்போது திடீர் என முன்னெப்போதும் எம் கண்ணுக்குப் புலப்பட்டிருக்காத விடயங்களைக் கூட நாம் காணக்கூடிய அளவிற்கு அந்த பொருள் மிக மிகத் தெளிவானதாக இருக்கும்.

அதேபோல உயிர் வாழ்விற்கு இருக்கும் தெளிவையும் அந்தவிதத்தில் வைத்திருக்கும்படியும், ஒவ்வொருவரும் தமது உயிர் வாழ்வை ஒரு வித்தியாசமான கோணத்தில் (விதத்தில்) பார்க்கவேண்டும் என்றும் உள்ளமைதிக்காக குரல் கொடுத்துவருபவராக, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் மஹராஜி அவர்கள், கூறுகிறார்கள். நாம் எமது உயிர் வாழ்வைத் தெளிவாகப் பார்ப்பதாக ஊகிக்கிறோம். ஆனால் நாம் ஒரு உருப் பெருக்கியின் ஊடாக எமது உயிர்வாழ்வைப் பார்க்கும் போது அது மேலும் தெளிவானதாக இருந்தால் அது எப்படி இருக்கும்.? என அவர் கேட்கிறார். நம்மைப் பற்றிய விடயங்களை நாம் முன்னெப்பொழுதும் பார்த்திராத அளவிற்கு பார்க்கவும், விளங்கிக் கொள்ளவும் சாத்தியமாக இருக்குமா?

அவர் மக்களை தெளிவு என்ற அந்த உருப்பெருக்கிக் கண்ணாடியைத் தெரிவுசெய்யுங்கள் என்று உற்சாகமூட்டுகிறார். உள்ளத்தின் நேர்மை நிலையைக் காண ஆரம்பியுங்கள் உயிர்வாழ்வின் எளிமையைப்புரிந்து கொள்ள ஆரம்பியுங்கள். அப்போது ஒவ்வொரு விடயமும் ஒரு செய்தியைக் கூறுவதாக இருக்கும். ஒவ்வொரு விடயமும் ஏதோ ஒரு கருத்தைக் கொண்டதாக இருக்கும்.

உண்மையான உள்ளமைதியையும், திருப்தியையும், ஆனந்தத்தையும், தேடும் பயணத்தில் ஒவ்வொருவருக்கும் தெளிவு மிகவும் முக்கியமானதென மஹராஜி கூறுகிறார். அவர் அந்த உள்ளுணர்வைத்தான் அந்த உருப்பெருக்கிக் காட்டிக்கு ஒப்பிடுகிறார். அதன் ஊடாக நோக்க வேண்டிய விடயம் அந்த உயிர் வாழ்வு தான் .

எவர் தமக்குள்ளே அமைதியைத் தேடுகிறார்களோ அவர்களுக்கு அவர்
இந்த உயிர் வாழ்வினால் கவரப்படுங்கள் என ஆலோசனை கூறுகிறார். இந்த உயிர் வாழ்வையிட்டு மிக மிக விழிப்புடன் இருங்கள்.

எந்த ஒரு முன்கூட்டித் தயாரிக்கப்பட்ட குறிப்புக்களும் இல்லாமல், மஹராஜி அவர்கள் தன் உள்ளத்தில் இருந்து உரையாற்றுகிறார். அவரின் வழிகாட்டுதலை நாடிச் செல்பவர்கள் அவரின் கூற்றுக்கள் தம்மைப் புத்துணர்வூட்டுவதாகக் கூறுகிறார்கள்.

பட்டயக் கணக்காளரும், தகுதிபெற்ற தகவல் முறைமைக் கணக்காளருமான 30 வயதான சஞ்சே குப்தா இந்தியாவின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பத்தியாலாக் கிளையின் செயலாளராகக் கடமையாற்றுகிறார். தனது 18 ஆவது வயதில் தனது தாயாரிடம் இருந்து மஹராஜியைப் பற்றி அறிந்துகொண்டதாக அவர் கூறுகிறார்.

எனக்கு எனது நாளாந்த வாழ்விற்கு மஹராஜியின் கற்பித்தல்கள் மிகவும் உதவியாக உள்ளன, நான் எனது வாழ்வில் எடுக்கும் ஒவ்வொரு அடியிலும் அவர் எனக்கு உதவுகிறார். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை என்னால் கணக்கிடக்கூட முடியாது என குப்தா கூறுகிறார்.

எனது தொழில் சார் நண்பர்கள் மேலும் மேலும் பணம் சேர்ப்பதற்காக அலைந்து திரிவதைத்தான் என்னைச் சுற்றி என்னால் காண முடிகிறது. எனினும் தொழிலில் நன்றாக நிலையூன்றியுள்ளவர்கள் கூட தமது வாழ்வில் திருப்தியானவர்களாக இல்லை. மஹராஜி எனக்கு அந்தத் தெளிவைத் தந்துள்ளார். அந்த வெற்றியைக் காண்பதற்கு மிகவும் செல்வந்தனாகவும், சொத்துக்களையும் வாகனங்களையும் கொண்டுள்ளவனாகவும், வங்கியில் அதிக பணத்தைக் கொண்டவனாகவும் இருக்கத் தேவையில்லை. எப்போது எனது உள்ளம் ஆனந்தத்தால், அமைதியால், திருப்தியால் நிறைவடைகிறதோ அப்போதுதான் நான் உண்மையிலேயே வெற்றி பெற்றவனாவேன் என்பதை நான் விளங்கிக் கொண்டுள்ளேன். இது எனது வாழ்வை மிகவும் எளிமையானதாக்கியுள்ளதுடன் நான் திருப்தியையும் உணர்கிறேன்.

ஐக்கிய அமெரிக்காவின் பண்ணைவளர்ப்போர் குடும்பத்தில் பிறந்த றொபேட் பாஸ் தான் தனது 14ஆவது வயதில் பனிச்சறுக்கு விளையாட்டு ஒன்றில் தனது கால் ஒன்றை இழந்த பின் தனது வாழ்வைப் பற்றித் தனக்கிருந்த கருத்துக்கள் கேள்விக் குறியாக மாறியதாகக் கூறுகிறார்.

நான் செல்வத்தாலும், உயர்தர வாழ்க்கையை வாழ்பவர்களாலும், அந்த வாழ்க்கை முறையுடன் பின்னிப்பிணைந்த பல விடயங்களினாலும் சூழப்பட்டிருந்தேன். ஆனால் அந்த விபத்தின் பின் அந்த விடயங்களில் இருந்து நான் விலகி விட்டேன். என அவர் கூறினார்.

புலவருடங்களின் பின் பாஸ் தனது சகோதரன் மற்றும் சகோதரனின் மனைவியிடம் (மைத்துணியிடம்) இருந்து மஹராஜியைப் பற்றிக் கேள்விப்பட்டார்.

மஹராஜியின் கூற்றுக்களைக் கேட்பதும் உள்ளே உள்ள அமைதி மற்றும் நிறைவில் கவனத்தைச் செலுத்துவதும் எனக்குப் பதில்களைத் தந்துள்ளன என அவர் கூறுகிறார். விடயங்கள் எப்படியுள்ளனவோ அவற்றை அப்படியே பார்ப்பதற்கு அவர் எனக்கு உதவியுள்ளார். அமைதியைத் தேடுவதை விட்டுவிட்டு நான் அமைதியுடன் வாழ ஆரம்பித்தேன்.

நான் மஹராஜியிடம் இருந்து கற்றுக்கொண்டவை, வாழ்வு எப்படி இருக்கவேண்டுமோ அதை அப்படியே வாழத் தேவையான ஆற்றலைத் தந்துள்ளது. மஹராஜியின் அறிவுரைகளைக் கேட்பதும், எமக்குள்ளே நிறைவைத் தேடுவதற்கு முன்னுரிமை கொடுப்பதும், நான் அகப்பட்டிருக்கக்கூடிய பல பிரச்சினைகளில் இருந்து என்னைக் காத்துள்ளது. எப்பொழுது நான் என்னை மஹராஜி வழிநடத்த அனுமதித்து என் உள்ளே உள்ள உலகத்தை அறிந்துகொள்ள விரும்பினேனோ அப்போது எனது உயிர்

வாழ்வில் மிக நிச்சயமானதும் (நிரந்தரமானதும்) மிகவும் நம்பகரமானதுமான இடம் ஒன்றைக் கண்டுகொண்டேன்.

மஹாராஜி நிகழ்ச்சிகளுக்கு வருபவர்களிடம் அவரின் உரைகளை மேலும் மேலும் கேட்கும்படி கேட்டுக் கொள்கிறார்.

அமைதியாகக் கேட்டுக் கிரகித்துக் கொள்ளுங்கள் என அவர் கூறுகின்றார். உங்கள் உள்ளம் கூறுவதைக் கேளுங்கள். அது உங்களைச் சந்திரனுக்குப் போகும்படியோ, ஒரு புதிய காரொன்றை வாங்கச்சொல்லியோ கேட்கப் போவதில்லை. உங்கள் உள்ளம் உங்களிடம் அமைதியைத்தான் கேட்கப் போகிறது. அது உங்களை ஆனந்தத்தால் நிரம்பும்படிதான் கேட்கப் போகிறது.

இவை வெறும் சொற்கள் மட்டும் அல்ல. இவை உற்சாகமூட்டும் உரையும் அல்ல. இது உண்மையானது.

உள்ளே போகும் பிரயாணமானது தனிப்பட்டதொன்றாகும். மஹாராஜி ஒவ்வொரு மனிதனையும் உள் அமைதியையும், ஆனந்தத்தையும், அத்துடன் அவை எங்கிருந்தாலும் அவற்றை கண்டுபிடிப்பதற்கான ஈடுபாட்டையும் கொண்டிருக்க ஊக்கமளிக்கிறார். ஒவ்வொரு மனிதனும் தங்கள் வாழ்வில் அந்தத் தாகத்திற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று அவர் கேட்கிறார்.

இதைக் கண்டுகொள்வதற்காக யார் அவருடைய வழிகாட்டுதல்களை நாடுகிறார்களோ அவர்களுக்கு எனது உதவிக் கரங்களை நீட்டுவதில் நான் பெருமைப் படுகிறேன். என்னை நாடுங்கள். நான் அதற்காகத்தான் இருக்கிறேன். நான் உலகெங்கும் பிரயாணம் செய்கிறேன். நான் எனது சிறு பராயத்திலேயே இதைச் செய்ய ஆரம்பித்தேன். நான் எங்கும் செல்லப்போவதில்லை. நான் இங்கேதான் இருப்பேன். நான் உயிருடன் இருக்கும் வரை இதைச் செய்வதற்குத்தான் தீர்மானித்துள்ளேன். எனது முழு வாழ்க்கையும் இதற்குத்தான்.

மேலதிக தகவல்களுக்கும், இலவசமாக, இரவலாக விடியோக்களை பெறுவதற்கும்,

416 431 5000
514 495 4438